<u>சுருக்கம்</u>

த.வ.அ.நி.(ம).செ.துறை– தமிழ்நாட்டில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ சிகிச்சை உதவும் திட்டத்தை மேற்கொள்ள தனி நலநிதி வாரியம் அமைத்தும் – அதற்கு நிதி ஒதுக்கீடு செய்தும் ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை**

**அரசு ஆணை (நிலை) எண். 17** **நாள்: 14.01.2008.**

படிக்கப்பட்டது

<u>ஆணை:</u>

பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம், குடும்ப நல ஓய்வூதியம் மற்றும் பத்திரிகையாளர்கள் பணியில் இருக்கும்போது காலமானால் அவர்களது குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பத்திரிகையாளர் குடும்ப நல நிதித் திட்டத்தின்கீழ் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

2) பத்திரிகையாளர்கள் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ளும்போது மருத்துவச் செலவினை ஈடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் அவர்களுக்கு பத்திரிகையாளர் நல நிதி திட்டம் ஒன்று அமைத்து அதற்கு நல நிதி குழு ஒன்று அமைக்க முடிவு செய்யப்பட்டது.

3) பத்திரிகையாளர் நல நிதியத்திற்கு ரூ.1,00,00,000( ரூபாய் ஒரு கோடி மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இத்தொகையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திடம் வைப்பீடு செய்து, அதிலிருந்து பெறப்படும் வட்டியில் இருந்து கடுமையான நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ளும்போது மருத்துவ செலவினை ஈடுசெய்ய முடியாத நிலையுள்ள பத்திரிகையாளர்களுக்கு ஏற்படுமாயின் அவர்களுக்கு உதவித் தொகை வழங்க இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

4) பத்திரிகையாளர் மருத்துவ உதவி பெறும் தகுதியுள்ள பயனாளிகளை தேர்ந்தெடுக்க துறை செயலாளர் தலைமையில் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

1. செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை –தலைவர்
2. இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை –உறுப்பினர்
3. இணை இயக்குநர்(நிர்வாகம்), செய்தி மக்கள் தொடர்புத் துறை –உறுப்பினர்
4. த.வ.அ.நி.(ம).செத் துறை பார்க்கும் இணை/துணைச் செயலாளர் (நிதித் துறை) –உறுப்பினர்
5. துணைச் செயலாளர் (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை –உறுப்பினர்
6. மூத்த பத்திரிகையாளர் (திரு.டி.இ.ஆர்.சுகுமார், தினத்தந்தி நாளிதழ் செய்தி பிரிவின் தலைவர்)

த.தி.பா.,

5) மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் புதிய கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும்.

" 2235 சமூக பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூக பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 200 ஏனைய திட்டப் பணிகள் –I. திட்டத்தில் சேராததது – DE பத்திரிகையாளர் நல நிதியத்திற்கு பங்களிப்பு 10 பங்கு தொகைகள் 01. குறிப்பிட்ட நிதித் தொகை கொடுத்தல். ( த.தொ.கு.எண். 2235 60 200 DE 1014)

5) இத்திட்டம் இவ்வாணை வெளியிடும் நாள் முதல் தொடங்கப்படுகிறது.

6) 2007–08 முதல் துணை மானிய கோரிக்கையில் இத்தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை மேற் சொன்ன புதிய கணக்கிற்கான மதிப்பீடு, ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலர் ஆவார். மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை பெற்று தமிழ் நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திடம் வைப்பீடு செய்திட இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7) இந்த பத்திரிகையாளர் நல திட்டத்திற்கான விதி முறைகள் ஓய்வூதியகாரர்களுக்கு மருத்துவ உதவி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் உருவாக்க உரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 84552/TD/2007. நாள் 07.01.2008.

//ஆளுநரின் ஆணைப்படி//

கோ. சந்தானம்
அரசுச் செயலாளர்

பெறுநர்
அனைத்து குழு உறுப்பினர்கள்
மாநில கணக்காயர் (கணக்குகள் (ம)பணி வரவு) சென்னை–18
மாநில கணக்காயர்–35
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–9
கணக்கு அலுவலர்
த.வ.அ.நி(ம).செ.த் துறை, சென்னை –9
நகல்:
சென்னை நிருபர்கள் சங்கம், சென்னை–2
தலைவர் சென்னை பத்திரிகையாளர் சங்கம், சென்னை –2
நிதி(த.வ.(ம).செ)த் துறை, சென்னை –9
நிதி (வரவு– செலவு பொ–II)த் துறை
த.நா.பத்திரிகையாளர்கள் சங்கம், சென்னை
த.வ.அ.நி.(ம).செ.(வரவு–செலவு/கணக்கு)த் துறை
சென்னை–9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்/ பிரிவு அலுவலர்